KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 10 No. 07 (2026)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 10 No. 07 (2026): Kalanjiyam Special issue - November 2026

UGC Approved by Transparent Peer Review

சங்க இலக்கியத்தில் இந்திரவில் (வானவில்): கார்கால மேகங்களுக்கும் மழைக்கும் இடையேயான வானியல் மற்றும் இலக்கியப் பிணைப்பு – ஓர் ஆய்வு

The Rainbow (Indra Vil) in Sangam Literature: A Study of the Astronomical and Literary Correlation Between Monsoon Clouds and Rainfall

D. Muthuramya[1*], Dr. N. M. Kavitha[2]

[1] Research Scholar (Full-time), Department of Tamil, Vellalar College for Women (Autonomous), Thindal, Erode – 638012, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0009-0001-6266-2208

[2] Assistant Professor, Department of Tamil, Vellalar College for Women (Autonomous), Thindal, Erode – 638012, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0009-0005-9683-3860

*தொடர்புக்கு: d.muthuramya_phd@vcw.ac.in

ARTICLE INFO

Article history
Received: 05 November 2026
Revised: 10 November 2026
Accepted: 14 November 2026

Article ID
KIJTS10n07m112026.02

DOI
10.63300/KIJTS10n07m112026.02

Peer review
Double-blind peer review

Keywords
திருவில்
இந்திரவில்
வானவில்
கார்காலம்
முல்லைத் திணை
குறிஞ்சித் திணை
அகநானூறு
ஐங்குறுநூறு
சங்க வானியல்

ABSTRACT

சங்கப் புலவர்கள் வானவில்லைக் கார்கால மேகத்தோடும் மலையோடும் இணைத்தே பாடினர் என்பதையும், அந்த இணைப்பு ஒரே நேரத்தில் வானியல் கவனிப்பாகவும் அகத்திணை உணர்ச்சிக் குறியீடாகவும் செயல்படுகிறது என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது. சங்கப் பாடல்களில் வானவில் பெரும்பாலும் 'திருவில்' என்றும், 'வில்', 'வானவில்' என்றும் வழங்கப்படுகிறது; பிற்கால உரை மரபும் இலக்கிய வழக்கும் அதனை 'இந்திரவில்' எனப் பொருள்கொண்டன. கடல்நீரை முகந்த மேகம் மலைமேல் வலம்வந்து பொழியும்போது வில் தோன்றுகிறது என்ற வரிசை, இன்றைய வளிமண்டல அறிவியல் கூறும் ஒளிவிலகல்–எதிரொளிப்பு நிகழ்வுக்கான சூழலை (மழைத்துளி, கதிரொளி, காண்போன் நிலை) துல்லியமாகப் பதிவு செய்கிறது. அதே காட்சி, முல்லைத் திணையில் தலைவனின் வருகைக்கான காலக்குறியாகவும், தலைவியின் ஆற்றாமையைக் கூட்டும் காட்சித் துயரமாகவும் மாறுகிறது. வானவில் பற்றிய சங்கப் பதிவுகளை வானியல், நிற அழகியல், இலக்கியத்தில் உணர்ச்சிக் குறியீடு என்ற மூன்று தளங்களில் இவ்வாய்வு விளக்குகிறது. வானவில் நானிலங்களிலும் ஐந்திணைகளிலும் தோன்றும் இயற்கை நிகழ்வாயினும் மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத் திருவில்லின் காட்சியே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS

ABSTRACT

This article establishes that Sangam poets portrayed the rainbow in close association with monsoon clouds and mountains, and that this association simultaneously functioned as an observation of atmospheric phenomena and as an emotional symbol within the Akam poetic tradition. In Sangam literature, the rainbow is predominantly referred to as Thiruvil, Vil, and Vaanavil, while later exegetical traditions and literary conventions interpreted it as Indravil (the bow of Indra). The sequence in which clouds, having gathered moisture from the sea, move over the mountains and release rain, culminating in the appearance of a rainbow, remarkably corresponds to the atmospheric conditions underlying the phenomenon explained by modern atmospheric science, particularly the refraction and internal reflection of sunlight within raindrops, involving the presence of raindrops, sunlight, and the observer's position.

The same natural phenomenon also assumes an emotional significance in Mullai Thinai, functioning as a seasonal indication of the hero's anticipated return while intensifying the heroine's anguish of separation. This study examines the Sangam references to the rainbow across three interconnected dimensions: astronomical observation, chromatic aesthetics, and its function as an emotional symbol in literature. Although the rainbow is a natural phenomenon that occurs across all four ecological landscapes (Nilan) and the five classical Thinai divisions, this study specifically focuses on the visual representation of the rainbow associated with the mountainous landscape of Kurinji Thinai.

Keywords: Thiruvil, Indravil, Rainbow, Monsoon Season, Mullai Thinai, Kurinji Thinai, Akananuru, Ainkurunuru, Sangam Astronomy.

How to cite this article: Muthuramya, D., & Kavitha, N. M. (2026). சங்க இலக்கியத்தில் இந்திரவில் (வானவில்): கார்கால மேகங்களுக்கும் மழைக்கும் இடையேயான வானியல் மற்றும் இலக்கியப் பிணைப்பு – ஓர் ஆய்வு [The Rainbow (Indra Vil) in Sangam Literature: A Study of the Astronomical and Literary Correlation Between Monsoon Clouds and Rainfall]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 10*(7), 15–29. https://doi.org/10.63300/KIJTS10n07m112026.02
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

1. முன்னுரை

சங்க இலக்கியம் இயற்கையைக் காட்சிப் பொருளாக மட்டும்மல்லாமல், மனித உணர்வுகளை ஏந்திநிற்கும் குறியீட்டு மொழியாகவும் பயன்படுத்தியது. சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றுள்ள வானவில் பற்றிய குறிப்புகளை, இயற்கை, அறிவியல் மற்றும் முல்லைத் திணைக்குரிய அகத்திணை உணர்வுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு விளக்குகிறது. இது வளிமண்டல அறிவியலைச் சங்கப் புலவர்கள் எவ்வாறு துல்லியமாகப் பதிவு செய்துள்ளனர் என்பதை நிறுவுகிறது.

சங்கப் புலவர்கள் வானவில்லை மேகம்–மலை–மழை என்ற ஒரு முழுமையான வானிலை நிகழ்வின் ஒரு கூறாகவே கண்டனர் என்பதும், அந்நிகழ்வு முல்லைத் திணையின் ‘ஆற்றியிருத்தல்’ என்ற உரிப்பொருளோடு இறுகக் கட்டப்பட்டுள்ளது என்பதும் இவ்வாய்வில் ஆராயப்படுகிறது.

1.3 ஆய்வு நோக்கங்கள்

1. சங்கநூல்களில் வானவில்லைக் குறிக்கும் சொற்களையும் (திருவில், வில், வானவில்) அவற்றின் பொருள்மரபையும் அடையாளம் காணுதல்.
2. வானவில் தோன்றும் வானிலைச் சூழலைச் சங்கப் புலவர்கள் எவ்வளவு துல்லியமாகப் பதிவு செய்தனர் என இன்றைய வளிமண்டல அறிவியலோடு ஒப்பிடுதல்.

3. கார்மேகத்தின் கருமை, மலையின் பசுமை, வில்லின் பல்வண்ணம் ஆகியவற்றின் நிற இயல்பை விளக்குதல்.
4. முல்லைத் திணைப் பிரிவுணர்வில் வானவில் எவ்வாறு உணர்ச்சிக் குறியீடாக இயங்குகிறது எனக் காட்டுதல்.

1.4 ஆய்வு அணுகுமுறைகள்

1. விளக்கமுறை,

2. ஒப்பீட்டுமுறை

3. பகுப்பாய்வுமுறை

3. சூழலியல் அணுகுமுறை

4. அழகியல் அணுகுமுறை



படம் 1. சங்க இலக்கியத்தில் வானவில்: இயற்கை, அறிவியல் மற்றும் அகத்திணை உணர்வியல்

2. கார்காலத்தின் வருகை

“காரும் மாலையும் முல்லை”

(தொல். அகத். 6)

என முல்லைக்குரிய பெரும்பொழுது கார்காலம். கார்காலத்தின் தொடக்கமும் முல்லை மலர்வதும் ஆயர் வாழ்வின் ஒரு பகுதியாகவே முல்லைக்கலியில் பாடப்படுகின்றன கார்காலம் என்பது வினைமுடித்துத் தலைவன் திரும்புவதாக வாக்களித்த காலம்; மழை வளத்தின் அடிப்படை; அதே மழை, தலைவன் வராதபோது தலைவிக்குத் துயரம். இக்காத்திருத்தல் நிகழும் வானம் தான் வானவில் தோன்றும் வானம்.

2.1 மலைப்பகுதிகளின் பின்னணி

குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது கூதிர்; முல்லைக்குரியது கார். ஆனால் கார்மேகம் மலையில்தான் தங்கிப் பொழிகிறது; அந்த மழைநீரே காட்டாறாக முல்லைக் காட்டை வளப்படுத்துகிறது. எனவே வானவில் காட்சிகளில் குறிஞ்சியின் மலையும் முல்லையின் காலமும் ஒன்றிணைகின்றன. மலையில் மழை பொழிந்து காட்டைச் செழிப்பாக்கி, வயலை வளப்படுத்தி, கடலில் கலக்கிறது.

2.2 சங்கப் புலவர்களின் கட்டமைப்பு

சங்கப் பாடல் ஒரு காட்சியை அடுக்குகளாகக் கட்டுகிறது: மேலே வானம், நடுவில் மலையும் மேகமும், கீழே மழையால் கவின்பெறும் நிலம். அகத்திணை வாழ்வியலில் இயற்கையும் மனித ஒழுக்கமும் இணைந்தே பாடப்படுகின்றன. மழையால் கவின்பெறும் நிலம் தலைவியின் அகநினைவை எதிரொலிக்கும் கண்ணாடியாகிறது. இந்தக் கட்டமைப்பில் வானவில் மேலடுக்கின் உச்சக் காட்சியாக அமைகிறது.



படம் 2. சங்க இலக்கியத்தில் இயற்கை அழகியல்: கார்காலமும் மலைச் சூழலும்

இந்த இன்போகிராபிக் காட்சி, சங்கம் இலக்கியத்தின் முக்கிய கருவான 'அகத்திணையை' விளக்குகிறது. குறிப்பாக, கார்காலம் மற்றும் மழைக்காலத்துடன் தொடர்புடைய 'முல்லை' மற்றும் 'குறிஞ்சி' நிலங்களின் இயற்கை சூழல் மற்றும் மனித உணர்ச்சிகளின் பிணைப்பை இது படம்பிடித்துக் காட்டுகிறது.

3. இந்திரவில் (வானவில்) தோற்றமும் சங்ககால அறிவியல் பார்வையும்

சங்க மூலநூல்களில் வானவில்லுக்கு மிகுதியாக வழங்கும் சொல் ‘திருவில்’ ஆகும்; ‘வில்’, ‘வானவில்’ என்ற வடிவங்களும் உள்ளன. ‘இந்திரவில்’ என்ற பெயர்

மூலப்பாடல்களில் அரிது; முதன்மையாக உரைமரபிலும் பிற்கால வழக்கிலும் ‘திருவில்’ என்பதற்கான விளக்கமாகவே வருகிறது.

3.1 வானவில்லின் பெயர்கள்

திருவில் — ‘திரு’ என்பது அழகு, செல்வம், மங்கலம்.

> “திருவில் அல்லது கொலைவில் அறியார்
> நாஞ்சில் அல்லது படையும் அறியார்.”
>
> *(புறம். 20)*

சேரனின் நாட்டு மக்கள் வானில் தோன்றும் அழகிய வில்லையே அறிவர்; கொல்லும் வில்லை அறியார். இங்கு திருவில் அமைதியின் குறியீடு.

- **வில் / வாங்கு வில்**

  “ஓங்கு உயர் வானின் வாங்கு வில் புரையும்.”

  (பரிபாடல் 2:28)

- திருமாலின் மார்பில் அணிந்த முத்துமாலையின் வளைவு உயர்வானில் வளைந்த வில்லோடு ஒப்பிடப்படுகிறது.
- **குறை வில்**

  “அகல் இரு வானத்துக் குறை வில் ஏய்ப்ப
  அரக்கு இதழ்க் குவளையொடு நீலம் நீடி”

  (பெரும்பாணாற்றுப்படை 292 - 293)

மழை நின்ற கருவானில் தோன்றும் முழுமையற்ற வில்லுக்கு செங்குவளையும் நீலமும் மலர்ந்த பொய்கை உவமையாகிறது.

- **எய்யா வரி வில்**

  ”யாங்கு ஆகுவள்கொல் தானே? விசும்பின்
  எய்யா வரிவில் அன்னபைந் தார்.”
  அகநானூறு 192: 3-4

‘விசும்பின் எய்யா வரி வில்’ என்ற தொடரானது அம்பு எய்யா வில் (போரில் அம்பு எய்வதற்குப் பயன்படாத வில்) வரிவில்(பல வண்ணக் கோடுகளுடைய வில்) என்ற இரு பண்புகளையும் துல்லியமாகச் சுட்டுகிறது.

- **வானவில் / இந்திரவில்**

  “வச்சிரத்தான் வானவில்லு”

  (பரிபாடல் 18:39)

வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரனின் வில் என்பதே இதன் பொருள். ‘இந்திரவில்’ என்ற பெயரின் தொன்மச் சாயல் தெளிவாகத் தெரிகிறது.

3.2 வானவில் தோன்றும் சூழல்:

வானவில்–மேகம்–மலை - மழை என்று வானவில் தோன்றும் சூழலை ஒரே பாடலில் இணைத்துள்ளனர்.

> “மலைமிசைக் குலஇய உருகெழு திருவில்
> பணைமுழங்கு எழிலி பௌவம் வாங்கித்
> தாழ்பெயல் பெருநீர் வலன்ஏர்பு வளைஇ
> மாதிரம் புதைப்பப் பொழிதலின் காண்வர
> இருநிலம் கவினிய ஏமுறு காலை.”
>
> *(அகம். 84: 1–5)*

அழகான திருவில் மலையின் மேல் வளைந்து காணப்படுகிறது; பறைபோல முழங்கும் மேகம் கடல்நீரை முகந்து, வலமாக எழுந்து திசைகளைச் சூழ்ந்து, மறைக்கும்படி மழையைப் பொழிகிறது; அதனால் நிலம் கவின் பெறுகிறது. இவ்வடிகளில் வானவில் மழையின் அறிகுறியாகவும், மழைக்காலத்தின் அடையாளமாகவும் உள்ளது. மேகம் கடல்நீரை அள்ளிவந்து நிலத்தில் கொட்டுவதே மழை என்ற சங்ககாலத் தெளிவும் இப்பாடலில் வெளிப்படுகிறது.

3.3 இன்றைய அறிவியலோடு ஒப்பீடு

வானவில் தோன்ற மூன்று நிபந்தனைகள் தேவை: பார்ப்பவருக்குப் பின்னால் சூரியனும், முன்னால் மழைத்துளிகளும், தாழ்ந்த உயரத்தில் சூரியனும் இருக்க வேண்டும். நீர்த்துளிக்குள் நுழையும் கதிரொளி ஒளிவிலகலடைந்து, உள்எதிரொளித்து, நிறப்பிரிகை அடைவதால் வானவில் உருவாகிறது; மேகத்திலுள்ள சங்கப் புலவர்கள் இந்தக் காரணத்தை விளக்கவில்லை; ஆனால் அதன் நிபந்தனைகளை முறையாகக் கவனித்துள்ளனர்:

அறிவியல் நிபந்தனை	சங்கப் பதிவு	சான்று
மழைத்துளிகள் நிறைந்த மேகம்	பௌவம் வாங்கிய எழிலி, தாழ்பெயல் பெருநீர்	அகம். 84
மழை தொடங்கும் அல்லது நிற்கும் நேரம்	திருவில் கோலி எழிலி சோர்தொடங்குதல்; மழை நின்றபின் குறைவில்	ஐங். 428; பெரும்பாண்.
வளைந்த வடிவம்	வாங்கு வில், குலஇய திருவில், கோலி	பரி. 2; அகம். 84; ஐங். 428
நிறப்பட்டைகள்	வரி வில்; செங்குவளை–நீலம் உவமை	அகநானூறு (மணிமிடை பவளம்); பெரும்பாண்.
முழுமையற்ற வில் (மேகம் மறைக்கும்போது)	குறை வில்	பெரும்பாண்.

புலவர்கள் கண்டது நிகழ்வின் சூழலை மட்டுமேயாகும். அதன் ஒளியியல் காரணத்தை அவர்கள் கூறவில்லை. எனவே இங்கு 'அறிவியல்' என்பது கோட்பாட்டைக் குறிக்காமல், துல்லியமான இயற்கைக் கவனிப்பைக் குறிக்கிறது.

3.4 தொன்மமும் எதார்த்தமும்

'இந்திரனின் வில்' என்ற தொன்மக் கருத்து பரிபாடல் போன்ற பிற்காலச் சங்கநூலில் காணப்படுகிறது. ஆனால் அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவற்றில் வானவில் தெய்வத்தின் கருவியாகக் காட்டப்படவில்லை; மலை, மேகம், மழை என்ற இயற்கைச் சங்கிலியின் ஒரு பகுதியாகவே காட்டப்படுகிறது. மேலே சொன்னது போல புறநானூற்றுப் பாடலொன்று வானவில்லைக் கொலை வில்லிலிருந்து வேறுபடுத்தி, அதனை மனித அறத்தின் குறியீடாக மாற்றுகிறது. எனவே சங்கப் பார்வை தொன்மத்தை விட இயற்கைக் கவனிப்பையும் அற உவமையையுமே முன்னிறுத்துகிறது எனலாம்.



படம் 3. இந்திரவில் (வானவில்): சங்க இலக்கியமும் அறிவியலும்

சங்க இலக்கியங்களில் வானவில் 'திருவில்', 'வில்' என்று அழைக்கப்பட்டுள்ளது. இது அமைதி மற்றும் அழகின் குறியீடாகக் கருதப்படுகிறது. புறநானூறு, அகநானூறு போன்ற நூல்கள், இயற்கை நிகழ்வாக மேகம், மலை, மழையுடன் வானவில் தோன்றுவதை விளக்குகின்றன. இன்றைய அறிவியல்படி, சூரிய ஒளி மழைத்துளிகளில் பட்டு ஒளிவிலகல், உள்கதிர் தெறிப்பு மற்றும் நிறப்பிரிகைக்கு உள்ளாவதால் வானவில் உருவாகிறது. தொன்மக் கதைகள் இந்திரனுடன் தொடர்புபடுத்தினாலும், சங்க இலக்கியம் இயற்கைக் கவனிப்புக்கே முன்னுரிமை அளிக்கிறது.

4. மேகங்களுக்கும் மலைகளுக்கும் இடையேயான நிறக் குறியீடுகள் (Color Dynamics)

சங்கப் புலவர்கள் வானவில்லை எப்போதும் ஒரு நிறப் பின்னணியோடு சேர்த்தே வரைகின்றனர்: அதனாலேயே ஒளிர்கிறது.

4.1 கருமைக்கும் வண்ணத்திற்கும் இடையேயான முரண்

வானவில் கருத்த மழைமேகத்தின் முன்னால்தான் தெளிவாகத் தெரிகிறது என்பது இன்றைய ஒளியியல் உண்மை. அகநானூறு 84 ஆம் பாடல் இதனைக் காட்சியாகவே தருகிறது: 'உருகெழு திருவில்' மலைமேல் வளைந்திருக்க , 'பணைமுழங்கு எழிலி' திசைகளை மறைக்கிறது. வில்லின் அழகும் மேகத்தின் அச்சமும் ஒரே சட்டகத்தில் அமைகின்றன. 'உருகெழு' என்ற அடைமொழி வில்லுக்கு அழகுடன் அத்திறத்தையும் ஏற்றுகிறது; இது பிறகு தலைவனின் அகநிலைக்கும் பொருந்துகிறது.

4.2 வண்ணங்களின் சங்கமம்:

பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தில் (பெருங்குன்றூர் கிழார்) சேரமன்னனின் மார்பு மலைக்காட்சியோடு ஒப்பிடப்படுகிறது:

> தண்கமழ் கோதை சூடிப் பூண்சுமந்து
> திருவில் குலைஇத் திருமணி புரையும்
> உருகெழு கருவிய …
>
> *(பதிப்பற்றுப்பத்து 31 – 33)*

வானவில்லை வளைத்து, நீலமணி போன்ற, இடிமின்னல் கொண்ட பெருமழைமேகம் வான்தொடும் சிகரத்தில் பொழிகிறது; அங்கு வேங்கை மலர்ந்து, அருவி வீழ்கிறது. இங்கு நான்கு நிறங்கள் ஒரே சட்டகத்தில் இணைகின்றன:

- **நீலம் / கருமை** — திருமணி புரையும் மழைமேகம் (பின்னணித் திரை)
- **பல்வண்ணம்** — குலைத்த திருவில் (மேல்அடுக்கு)
- **பொன்மஞ்சள்** — விரிந்த வேங்கைமலர் (மலைச் சாரல்)
- **வெண்மை** — சிகரத்திலிருந்து விழும் அருவி

மன்னனின் மார்பில் அணிந்த மாலை, சந்தனம், அணிகலன்கள் இவற்றுக்கு நேராக நிறுத்தப்படுகின்றன. எனவே வானவில் இங்கு மாலையின் வளைவுக்கும் பல்வண்ணத்திற்கும் உவமையாகிறது. பரிபாடல் 2 இலும் திருமாலின் கருமார்பில் அணிந்த முத்துமாலை கருவானில் வளைந்த வில்லாகக் காட்டப்படுகிறது. இரண்டிலும் அடிப்படை ஒன்றே: கருமையான பரப்பின்மேல் வளைந்த ஒளிப்பட்டை.

4.3 ஒளியும் நிழலும்

பெரும்பாணாற்றுப்படையின் 'குறை வில்' உவமை ஒளி–நிழல் நுட்பத்தைக் காட்டுகிறது. மழை நின்ற 'அகல் இரு வானத்தில்' மேகத்தால் சில பகுதிகள் மறைந்த வில்லைப் புலவர் கவனித்துள்ளார். அந்த வில்லுக்கு இணையாக, முதுநீர்ப் பொய்கையில் செங்குவளையும் நீலமும் சேர்ந்து மலர்ந்த காட்சி சொல்லப்படுகிறது.

வானில் உள்ள நிறப்பட்டை நிலத்திலுள்ள நீர்நிலையில் எதிரொலிக்கிறது என்ற இந்த நிறஇணைவு, சங்கப் புலவரின் கட்புல அழகியலுக்குச் சான்று.

"இயற்கைத் தோற்றங்கள் உள்மனநிலையைக் குறிக்கும் குறியீடுகளாகச் செயல்படுகின்றன" என்பதைக் குறுந்தொகைக் காட்சிகள் வழி சுதா **(Sudha, 2023)** உளவியல் நோக்கில் விளக்குகிறார். அந்த நோக்கில், வானவில்லின் நிறக் குறியீடு அழகியலாக மட்டுமன்றி, உணர்வுச் சுமையைக் குறிக்கும் காட்சிமொழியாகவும் செயல்படுகிறது. கருமேகத்தின் அச்சமும் வில்லின் அழகும் ஒன்றாகத் தோன்றுவது, தலைவியின் ஏக்கத்தில் கலந்திருக்கும் அச்சத்தையும் நம்பிக்கையையும் ஒத்திருக்கிறது.



படம் 4. சங்க இலக்கியத்தில் வானவில்லின் வண்ணக் குறியீடுகள்

சங்கப் புலவர்கள் வானவில்லை மேகம், மலை, வேங்கை மரம் மற்றும் செம்மண் நிலம் போன்ற நிறப் பின்னணிகளுடன் இணைத்துக் காட்டுகின்றனர். கருமேகத்தின் முன் வில்லின் அழகு ஒளிர்வது அச்சம் கலந்த நம்பிக்கையைக் குறிக்கிறது (அகநானூறு). பதிற்றுப்பத்தில் நீலம், பொன், வெண்மை நிறங்களுடன் வில்லின் பல்வண்ணம் இணைகிறது. குறுந்தொகையில் வானத்து வில்லைக் குளத்து மலர்கள் பிரதிபலிக்கின்றன.

5. காதலும் பிரிவும்: வானவில்லின் உணர்ச்சிசார் குறியீடு

முல்லைத் திணையின் உரிப்பொருள் 'இருத்தல்' அல்லது 'ஆற்றியிருத்தல்'; அதாவது பிரிந்த தலைவன் வரும்வரை பொறுத்திருத்தல். கார்காலம் அந்தக் காத்திருப்பின் காலம். வானவில் அக்காலத்தின் கண்கூடான அடையாளம் என்பதால், அது காதலர் இருவருக்கும் வெவ்வேறு செய்தியைச் சொல்கிறது.

5.1 தலைவனின் பிரிவாற்றாமை:

அகநானூறு 84 ஆம் பாடலில் வேந்தனின் பாசறையில் தங்கியிருக்கும் தலைவன். திறை தராத அரணைநகர் மீது வேந்தன் சினந்துள்ளதால் அவன் ஊர் திரும்ப இயலவில்லை. அவன் கண்முன் திருவில் வளைந்த மலை, கடல்நீர் முகந்த மேகம், கவின்பெற்ற நிலம். இந்த மகிழ்வான காட்சியே அவனுக்குத் துயரமாகிறது: கார்காலம் வந்துவிட்டது; அவன் வாக்களித்த நேரம் கடந்துவிட்டது. எனவே வானவில் இங்கு மறைமுகமாக 'காலம் தவறியது' என்ற செய்தியைச் சுமந்துவருகிறது. முதல் அடியிலேயே வில்லுக்குச் சூட்டப்பட்ட 'உருகெழு' (அச்சந்தரும்) என்ற அடை, பிரிவில் வாடும் நெஞ்சுக்கு அழகுகூட அச்சமாகத் தோன்றும் உள்நிலையை அறிவிக்கிறது.

5.2 கூடலின் முன்னறிவிப்பு:

பேயனார் பாடிய முல்லைப் பாடலில் (விரவுப் பத்து) தலைவன் தலைவியிடம் கூறுவது

> "தேர்செலவு அழுங்கத் திருவில் கோலி
> ஆர்கலி எழிலி சோர்தொடங் கின்றே
> வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய
> யான்தொடங் கினனால் நின்புறந் தரவே."

(ஐங். 428. 1 - 4)

திருவில்லை வளைத்து முழங்கும் மேகம் பொழியத் தொடங்கியதால் போர் தடைப்பட்டது; வேந்தன் சொல்லிய பணி நின்றது; எனவே உன்னைப் பேணும் பணியைத் தொடங்கினேன் என்கிறான். அதாவது தலைவன் போருக்குச் செல்லாததால் தலைவியுடன் இருக்கிறான்.அகம் 84 இல் பிரிவைக் கூட்டிய அதே வானவில், இங்கு கூடலைக் கொணரும் அறிகுறியாகிறது. ஒரே இயற்கை நிகழ்வு சூழலுக்கு ஏற்ப எதிர்மாறான உணர்ச்சிகளைக் குறிக்கும் இந்தத் தன்மைதான் சங்க அகமரபின் நுட்பம்.

5.3 தலைவியின் காத்திருப்பு

தலைவியின் கூற்றாக வானவில்லை நேரடியாகக் குறிக்கும் பாடல் காணப்படவில்லை. அவள் துயரம் கார்மேகம், இடி, முல்லை மலர்தல் ஆகியவற்றின் வழியே பொதுவாக வெளிப்படுகிறது. தலைவி மேகத்தை நோக்கி, தலைவன் வருவதாகச் சொன்ன காலம் இதுவே என்றும், பொய்யான இடியால் அச்சுறுத்த வேண்டாம் என்று கூறுகிறாள். முல்லைத் தலைவி தன் துயரை மறைத்து, இல்லறம் காத்து, விருந்தோம்பி பண்போடு வாழுகிறாள். முல்லைப்பாட்டில் நேரம் தவறிய தலைவனுக்காக வாடும் தலைவியை செவிலி ஆற்றுகிறாள். இந்தச் சூழலில் வானவில், கார்காலம் வந்துவிட்டது என்பதை மறுக்கமுடியாத சான்றாக்கும் நிகழ்வு; எனவே அது அவள் ஏக்கத்தை மறைமுகமாகக் கூட்டும் என்ற வாசிப்பு இயல்பானது. ஆனால் அது உரையாசிரியர் மரபுசார்ந்த நீட்சி தானேயன்றி பாடலின் நேரடிக் கூற்று அன்று.

5.4 உவமையும் உள்ளுறையும்

சங்கப் பாடல்களில் வானவில் மூன்று வகையான உவமைகளில் வருகிறது:

1. **மாலை / அணிகலன்** — திருமாலின் முத்துமாலை (பரி. 2), சேரமன்னனின் மார்புமாலை (பதிற்றுப்பத்து, ஒன்பதாம் பத்து).
2. **மலர்கள்** — செங்குவளையும் நீலமும் கலந்த பொய்கை (பெரும்பாண்.).
3. **அறக் குறியீடு** — திருவில் × கொலைவில் (புறம். 20).

பொதுவாகச் சுட்டப்படும் ‘வில் — பெண்ணின் புருவம்’ என்ற உவமை, இவ்வாய்வில் எடுத்துக்கொண்ட வானவில் பாடல்களில் காணப்படவில்லை; புருவத்தை வில்லோடு ஒப்பிடும் மரபு போர்வில்லைச் சார்ந்தது. வானவில் நேரடி உள்ளுறையாக அமைவதில்லை; அது முதற்பொருளாகிய காலத்தைக் குறித்து, அதன் வழியே உரிப்பொருளை (பிரிவு, கூடல்) எழுப்புகிறது. இதுவே வானவில்லின் அகத்திணைச் செயல்பாடு.



படம் 5. காதலும் பிரிவும்: வானவில்லின் உணர்ச்சிசார் குறியீடு

சங்க அகத்திணையில் வானவில் கார்காலத்தின் அடையாளமாகவும், தலைவனின் பிரிவாற்றாமைக்கும் கூடலுக்கும் முக்கிய குறியீடாகவும் அமைகிறது. பிரிவுக் துயரத்தையும், கூடலின் இன்னிசையையும் உணர்த்துகின்றன. தலைவியின் காத்திருப்பு மற்றும் மாலை, மலர் போன்ற உவமைகளையும் இது வெளிப்படுத்துகிறது.

6. சங்கப் பாடல்களில் சான்றுகள் மற்றும் ஒப்பீடு

வானவில் சான்றுகள் அகம், புறம் இரண்டிலும் பரவியுள்ளன. அகப் பாடல்களில் வில் காலக்குறியீடாகவும், புறப் பாடல்களில் மார்பு மாலையாக அல்லது அறக் குறியீடாகவும் இயங்குகிறது.

6.1 செய்யுள் சான்றுகள்

பாடல்	புலவர்	திணை / வகை	வானவில் சொல்	பின்னணி	இலக்கியப் பயன்பாடு
அகநானூறு 84	மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்	முல்லை (பாசறைத் தலைவன்)	உருகெழு திருவில்	மலை, கடல்நீர் முகந்த மேகம், பெருமழை	காலம் தவறிய பிரிவுத் துயரம்
ஐங்குறுநூறு 428	பேயனார்	முல்லை (தலைவன் கூற்று)	திருவில் கோலி	முழங்கும் மேகம், மழைத் தொடக்கம்	போர் நிற்றல், கூடலின் முன்னறிவிப்பு
புறநானூறு 20	குறுங்கோழியூர் கிழார்	பாடாண் (சேரன்)	திருவில்	அமைதியான நாடு	திருவில் × கொலைவில் அறக் குறியீடு
பதிற்றுப்பத்து, ஒன்பதாம் பத்து	பெருங்குன்றூர் கிழார்	புறம் (சேரமன்னன்)	திருவில் குலைஇ	திருமணி புரையும் மேகம், வேங்கை, சிகரம்	மார்புமாலைக்கு உவமை, நிறக் கலவை
பரிபாடல் 2: 28	கீரந்தையார்	திருமால் வாழ்த்து	வாங்கு வில்	ஓங்கு உயர் வானம்	முத்துமாலைக்கு உவமை
பெரும்பாணாற்றுப்படை	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	ஆற்றுப்படை	குறை வில்	மழை நின்ற அகல் இரு வானம்	குவளை–நீலம் மலர்க் காட்சிக்கு உவமை
அகநானூறு (மணிமிடை பவளம்)	—	அகம்	எய்யா வரி வில்	விசும்பு	பசுங்கிளிக் கூட்டத்திற்கு உவமை

6.2 புலவர்களின் பார்வை வேறுபாடுகள்

முல்லைப் புலவர்கள் (சேந்தன் பூதனார், பேயனார்). இவர்களுக்கு வானவில் காலத்தைக் குறிக்கும் கருவி. சேந்தன் பூதனார் வில்லை மலை–மேகம்–கடல் என்ற பெருந்திரையில் வைத்து காட்சியை விரிவாக்குகிறார்; பேயனார் நான்கே அடிகளில் வில், மேகம், வேந்தன் பணி, தலைவி என்ற நான்கையும் இணைக்கும் சுருக்கத் திறனைக் காட்டுகிறார்.

புறப் புலவர்கள் (குறுங்கோழியூர் கிழார், பெருங்குன்றூர் கிழார்). இவர்கள் வானவில்லை மன்னனின் பெருமைக்கும் நாட்டின் அமைதிக்கும் குறியீடாக்குகின்றனர். சேரரின் கொடிச் சின்னம் வில் என்பதால், 'திருவில் அல்லது கொலைவில் அறியார்' என்ற அடி சொல்விளையாட்டாகவும் அமைகிறது. சங்கப் பாடல்களின் இத்தகைய உள்ளீடுகளை குறியீட்டுக் கோட்பாட்டு நோக்கில் வாசிக்கலாம்.

வாழ்த்து, ஆற்றுப்படைப் புலவர்கள் (கீரந்தையார், உருத்திரங்கண்ணனார்). இவர்கள் வானவில்லை உவமையாக மட்டுமே பயன்படுத்துகின்றனர்; ஆனால் அந்த உவமைகளில் காலம் (மழை நின்ற வானம்), வடிவம் (வாங்கு வில்), முழுமை (குறை வில்) ஆகிய நுண்ணிய கவனிப்புகள் பதிவாகின்றன.

6.3 ஒப்பீட்டு முடிவு

அகத்திணையில் வானவில் கார்காலப் பெரும்பொழுதின் கண்ணுக்குத் தெரியும் அடையாளம். வானவில் மழையை முன்னறிவிக்கிறது; பிரிவையும் கூடலையும் உணர்த்தும் குறியீடாகவும். புறப் பாடல்களில் அதே வில் அமைதியையும் மன்னனின் அழகையும் குறிக்கிறது. எனவே வானவில்லின் பொருள் அதன் தோற்றத்தால் அல்ல, அது இடம்பெறும் திணையாலும் கூற்றாலும் தீர்மானிக்கப்படுகிறது.



படம் 6. சங்க இலக்கியத்தில் வானவில்: சான்றுகள் மற்றும் ஒப்பீட்டு ஆய்வு

சங்கப் பாடல்களில் வானவில் 'திருவில்', 'வானவில்' எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. அகத்திணையில் இது காலக்குறியீடாகவும் (பிரிவு/கூடல்), புறத்திணையில் மார்புமாலை அல்லது அறக்குறியீடாகவும் அமைகிறது. புலவர்களின் பார்வையில் மாறுபட்டாலும், இயற்கைக் கவனிப்பும், உணர்ச்சிக் குறியீடாகப் பயன்படுத்துவதும் இப்பாடல்களின் தனிச்சிறப்பு.

7. முடிவுரை

சங்கப் புலவர்களுக்கு வானவில் தனித்த அழகுக் காட்சி அன்று; மேகம், மலை, மழை, காலம் ஆகியவற்றை ஒன்றிணைக்கக் கூடிய இணைப்புப் பாலமாக இருந்துள்ளது. இவ்வாய்வின் மூலம் வானவில்லின் பெயர்மரபு, தமிழரின் வானிவியல் அறிவு, வானவில்லின் நிறக்கட்டமைப்பு குறித்த சங்கப் பாடல்களின் பதிவுகள், அகப் பாடல்களில் உணர்ச்சிக் குறியீடாகவும், புறப் பாடல்களில் அமைதியின் குறியீடாகவும் செயல்பட்டுள்ளமை ஆகியவை கண்டறியப்பட்டது.

சங்கத் தமிழரின் இயற்கைக் கவனிப்பும் கவித்துவமும் பிரிக்கமுடியாதவை என்பதற்கு வானவில் ஓர் அழகிய சான்று.

8. துணைநூற்பட்டியல்

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 1: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 2: பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

சுப்பிரமணியன், ச. வே. (பதிப்பாசிரியர்). (2021). எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் (தொகுதி 3: அகநானூறு, புறநானூறு). மணிவாசகர் பதிப்பகம். (முதல் பதிப்பு - 2010; நான்காம் பதிப்பு - 2021).

மோகன், இரா. (உரையாசிரியர்). (2007). பத்துப்பாட்டு: முதல் பகுதி (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். (முதல் பதிப்பு - 2004; மூன்றாம் அச்சு - 2007).

நாகராசன், வி. (உரையாசிரியர்). (2007). பத்துப்பாட்டு: பகுதி - 2 (மூலமும் உரையும்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். (முதல் பதிப்பு - 2004; மூன்றாம் அச்சு - 2007).

Amala Karthiga, G. (2023). சங்க இலக்கியம் – ஓர் அறிவியல் பார்வை [Sangam literature: A scientific view]. *International Journal of Tamil Language and Literary Studies, 6*(1), 13–24. https://doi.org/10.5281/zenodo.10121807

Anitha, S. (2022). அமைப்பியல் நோக்கில் கலித்தொகையில் முதற்பொருள் [Kalithogai in the study of structural perspectives]. *International Research Journal of Tamil, 4*(1), 219–229. https://doi.org/10.34256/irjt22124

Gayathri, M. (2026). அகநானூற்றில் குறிஞ்சித் திணை உயிரினங்களும் சூழலியல் மெய்யியலும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு [Kurinji-tinai organisms and ecological philosophy in Agananuru: A comparative study]. *Kalanjiyam International Journal of Tamil Studies, 5*(05, Special Issue), 10–19. https://doi.org/10.63300/kijts05sp052026.02

Geetha, T. (2022). முல்லைப் பாட்டில் கருப்பொருள் வெளிப்பாடு [Themes in Mullai songs]. *International Research Journal of Tamil, 4*(S-21), 375–379. https://doi.org/10.34256/irjt224s2155

Saranyadevi, D. (2026). சங்க இலக்கியத்தில் வானியல் செய்திகள் [Astronomical knowledge in Sangam literature]. *International Research Journal of Tamil, 8*(3), 295–300. https://irjt.iorpress.org/index.php/irjt/article/download/2608/2112/4823

Selvaraj, S. (2020). கலித்தொகை – குறிஞ்சிக்கலியில் உள்ளுறை உவமம் [Internal illustration in Kurinjikali]. *Journal of Tamil Peraivu, 9*(1), 85–88. https://doi.org/10.22452/JTP.vol9no1.9

Sudha, N. (2023). குறுந்தொகைத் திணைமரபில் இயற்கைப் பின்னணியும் ப்ராய்டின் உளவியல் கோட்பாடும் [Nature in the thinai culture of Kurunthogai and Freud's theory of psychology]. *International Journal of Tamil Language and Literary Studies, 6*(1), 109–121. https://doi.org/10.5281/zenodo.10122254

Sumathi, S. D. (2022). முல்லைக்கலி உணர்த்தும் ஆயர் வரலாறு [The history of "Aayar" (shepherd) as indicated in Mullaikali]. *International Research Journal of Tamil, 4*(S-10), 103–109. https://doi.org/10.34256/irjt22s1017